பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

27 06 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உடலை ஆரோக்கியமாகவும், உறுதியாகவும் பேணுவதற்கு நம் நாட்டின் பாரம்பரிய முறைகள் உதவிகரமாக உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி 44 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. சென்னை ஒருங்கிணைந்த ரயில் பெட்டி தொழிற்சாலையில் நடப்பாண்டில் 4 ஆயிரத்து 200 ரயில் பெட்டிகளைத் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே இணையமைச்சர் திரு சோமண்ணா கூறியுள்ளார்.

4. கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. துனீஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

உடலை ஆரோக்கியமாகவும், உறுதியாகவும் பேணுவதற்கு நம் நாட்டின் பாரம்பரிய முறைகள் உதவிகரமாக உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மன் கி பாத் வானொலி உரை தொடர்பான காணொலி ஒன்றை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், நாட்டின் பாரம்பரிய முறைகளுடன் உடற்பயிற்சி மற்றும் உடல் உறுதியை பேணுவதற்கான புத்தொழில் நிறுவனம் குறித்து தெரிவித்துள்ளார்.

பழங்கால மரபுகளை நவீன அறிவியல் அணுகுமுறைகளுடன் இணைக்கும் வகையில் இந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், புத்தொழில் நிறுவனங்கள் தொடங்க மனதில் குரல் நிகழ்ச்சி உத்வேகம் அளித்துள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இதற்கிடையே பிரதமர் திரு நரேந்திர மோடி தமது கருத்துகளை வானொலி மூலம் பகிர்ந்துகொள்ளும் மன் கி பாத் நிகழ்ச்சி ஆகாஷ்வாணியில் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு இடம்பெறுகிறது.

அதனைத் தொடர்ந்து பிரதமர் உரையின் தமிழாக்கம் ஒலிபரப்பாகும். அன்றிரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

இதனை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள ஆகாஷ்வாணியின் அனைத்து நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி 44 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இந்தூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்மையில் நடைபெற்ற வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தின் மூலம் நாடு முழுவதும் ஒரு கோடியே 35 லட்சம் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நவீன் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

இந்தூரில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சோயாபீன் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும், இதேபோல் கோவையில் பருத்தி உற்பத்தியை அதிகரிப்பது குறித்து விரைவில் ஆலோசிக்கப்பட உள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னை ஒருங்கிணைந்த ரயில் பெட்டி தொழிற்சாலையில் நடப்பாண்டில் 4 ஆயிரத்து 200 ரயில் பெட்டிகளைத் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ரயில்வேதுறை இணையமைச்சர் திரு சோமண்ணா கூறியுள்ளார்.

சென்னை பெரம்பூரில் உள்ள அந்தத் தொழிற்சாலையில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

உலக அளவில் மிகச் சிறந்த ரயில் பெட்டி தயாரிப்பு தொழிற்சாலையாக இது திகழ்கிறது என்று அவர் கூறினார்.

கடந்த ஓராண்டில் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட ரயில் பெட்டிகள் இங்கு தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

படுக்கை வசதி கொண்ட வந்தேபாரத் ரயில் பெட்டிகள் இங்கு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இவை சிறிய மாற்றங்களுக்குப் பின்னர் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்றும் திரு. சோமண்ணா கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் உள்ள பள்ளிகளில் காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. மதிவேந்தன் கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்துறை சார்பில் பல்வேறு முன்னோடி திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில் 150 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கல்லூரியின் 82வது பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், கடந்த 4 ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரிகளுன மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

மக்கள் நலனுக்கான எந்தத் திட்டங்களையும் கடந்த 4 ஆண்டுகளில் திமுக அரசு செயல்படுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அரசு விழா என்ற பெயரில் முதலமைச்சர் அரசியல் பேசி வருவதாகக் கூறியுள்ளார்.

கச்சத்தீவு முதல் காவிரி வரை தமிழகத்தின் உரிமைகளை விட்டுக்கொடுத்தது திமுக தான் என்று அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் அமைதி, வளம், வளர்ச்சி அனைத்தும் அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் மீட்கப்படும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசுப் பணிகளுக்கான பல்வேறு தேர்வுகளை தாய்மொழியில் எழுதி ஏராளமானோர் பயனடைந்து வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

முந்தைய காங்கிரஸ்-திமுக கூட்டணி ஆட்சியில் மத்திய ஆயுத காவல்படை தேர்வுகளை ஆங்கிலம் அல்லது ஹிந்தி மொழிகளில் மட்டுமே எழுத முடியும் என்ற நிலை இருந்ததாக அவர் கூறியுள்ளார்.

அப்போது திமுக தமிழ் மொழியில் மத்திய அரசுத் தேர்வுகளை எழுத அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது, 13 மொழிகளில் மத்திய அரசு பணிகளுக்கான தேர்வுகளை எழுத ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் கடைக்கோடி கிராமங்களில் உள்ளவர்களும் மத்திய அரசுப் பணிகளில் சேர்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருப்பூர் மற்றும் தேனி மாவட்டங்களிலும் மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல், கரூர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

மத்திய ஆப்பிரிக்காவில் பள்ளி ஒன்றில் மின்மாற்றி வெடித்ததை அடுத்து ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 29 மாணவர்கள் உயிரிழந்தனர்.

--------------

மெக்சிகோவில் விழா ஒன்றில் மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டத்தில் 12 பேர் உயிரிழந்தனர்.

--------------

ரூர்கேலா எஃகு உற்பத்தி ஆலையை விரிவாக்கம் செய்வது குறித்த உயர்நிலை ஆய்வுக் கூட்டம் மத்திய அமைச்சர்கள் திரு குமாரசாமி, திரு திரு ஜுவல் ஓரம், திரு தர்மேந்திர பிரதான் ஆகியோர் முன்னிலையில் புவனேஸ்வரில் நடைபெற்றது.

--------------

வடகிழக்கு மாநிலங்களின் சுரங்கத்துறை அமைச்சர்கள் மாநாடு இன்று குவஹாத்தியில் நடைபெறுகிறது.

--------------

நாகப்பட்டினத்தில் 19 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 814 பயனாளிகளுக்கு மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.

--------------

யுபிஎஸ்சி முதன்மைத் தேர்வு எழுதும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், உதவித் தொகை பெறுவதற்கான மதிப்பீட்டுத் தேர்வுக்கு அடுத்த மாதம் 10ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தெரிவித்துள்ளது.

--------------

தூத்துக்குடி மாவட்டத்தில் பணிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களின் உயர்கல்வி தொடர்பான தடையை நீக்க ஆலோசனை வழங்குவதற்கான கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் திரு இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

--------------

சென்னையில் சாலையோர வியாபாரிகள் நகர விற்பனை குழு தேர்தல் நேற்று நடைபெற்ற நிலையில், அதில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படவுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் கூறியுள்ளது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

துனீஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 3-6, 6-1, 6-3 என்ற செட் கணக்கில் ஃபிரான்சின் **Alexis**-ஐ வென்றார்.

------------

கொழும்பில் நடைபெற்ற ஆசிய ஸ்நூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Paras Gupta** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

------------

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தன்வி ஷர்மா, பார்கவ் ராம் உள்பட 19 பேர் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி ஜூலை 18 முதல் 27ஆம் தேதி வரை இந்தோனேஷியாவில் நடைபெற உள்ளது.

**<<<<>>>>**